# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.513/2022 P.W.3

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பெருமாள் | த-பெ | பொசலான் |
| ஊர்: | : | சங்கராபுரம் | | |
| வயது: | : | 45/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | கொத்தனார் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.01.2026

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-------------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

1) நான் தற்சமயம் சங்கராபுரத்தில் வசித்து கொத்தனாராக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது. தேதி மாதம் வருடம் எதுவும் நினைவில் இல்லை. சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் நான் ஔவையார் தெருவில் வந்து கொண்டிருந்தபோது அங்கு நடந்த திருவிழாவில் கலந்து கொள்வதற்காக அங்கு இருந்த மதுபானக்கடையில் மதுவை வாங்கிக்கொண்டு வந்தபோது எனது அண்ணன் மகனை மூன்று நபர்கள் கல்லைக்கொண்டு தாக்கினார்கள். யார் அடித்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. அதில் அவருக்கு மண்டை உடைந்து இரத்தம் வந்து கொண்டிருந்ததால் அவரை காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றேன். எனது அண்ணன் மகன் கையில் பணம் வைத்திருந்தார். கழுத்தில் செயின் அணிந்திருந்தார். ஆகையால் அதனை மனதில் கொண்டு நபர்கள் தாக்கிவிட்டார்கள். மற்றபடி எதற்காக சண்டை நடந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. யார் அவரை அடித்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலீசார் விசாரணையில் கடந்த 27.05.2016 அன்று மாலை 4.30 மணிக்கு கீழஊரணி அரசு மதுபான கடை எதிரே உள்ள பழைய இரும்பு கடை முன்பு வந்து கொண்டிருந்தபோது வழக்கின் எதிரிகள் தன்னுடைய அண்ணன் மகன் அவரிடம் தகராறு செய்து கீழ்நோக்கிய வார்த்தைகளால் திட்டி கீழே கிடந்த கல்லை எடுத்து அடித்து கொலை மிரட்டல் விடுத்த சம்பவத்தை நேரடியாக பார்த்துவிட்டு தற்போது வழக்கு விசாரணையில் கண்ணுற்ற சங்கதிகளை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.01.06 15:29:40 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.